TAM209C1

# குட்டியூண்டு முயல்

ஆதாரம்: Book for Children





ஒரு தோட்டத்தில் ஒரு குட்டி முயல் இருந்தது. அது எப்போதும் “நான் சின்னதாக இருக்கிறேன். எல்லோரும் என்னை விடப் பெரியவர்கள்” என்று கவலையாக இருந்தது. தினந்தோறும் அது மற்றவர்களோடு தன் அளவை ஒப்பிட்டுக் கொள்ளும். அது ஒரு கேரட் அளவே இருந்தது. மற்ற முயல்கள் கேலி பேசின. ஒருநாள், அது கேரட்டை விட பெரியவனாக வளர்ந்தது. சில பெரிய முயல்கள் குட்டி முயல்களைக் கேலி செய்வதைப் பார்த்தது…





**வகுப்பறைச் செயல்பாடு:** நீ பெரியதாக வளர்ந்தால் என்னவெல்லாம் செய்யலாம் என்று ஆசைப்படுகிறாய் என்று எழுது. நீ என்ன செய்வாய் என்று படமாகவும் வரைக.

உதாரணமாக,

என் பெயர் _______. நான் ___ ஆம் வகுப்பு படிக்கிறேன். எங்கள் வகுப்பு மேசை அளவு உயரமாக இருப்பேன். நான் பெரிதாக வளர்ந்தால், மின்விசிறியின் பொத்தானை நானே இயக்கிக் கொள்வேன். எங்கள் வீட்டின் பரன் மேல் இருக்கும் விளையாட்டுப் பொருள்களை நானே எடுத்துக் கொள்வேன். அம்மாவுக்கும் அப்பாவுக்கும் திண்பண்டம் வாங்கித் தருவேன். தோட்டத்தில் நிறைய மரம் வளர்ப்பேன். பிடித்த ஊருக்குப் போய்…

(கதையை மாணவர்கள் தங்கள் சொந்த நடையில் எழுதுவற்கான முழு சுதந்திரத்தையும் ஆசிரியர்கள் அளிக்க வேண்டும்)